Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 304	உள்ளூர் - 02.11.2026	திங்கட்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 304	வெளியூர் - 03.11.2026	செவ்வாய்க்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

வேலை, கல்வி, வழக்கு, பகை தீர பரிகாரங்கள்!

டி.எம்.பி.,/ பி.ஓ.பி., /ஃபெடரல் வங்கிகளில் வேலைகள்!

டாஸ்மாக்: புதிய விதிகள் அமல்!

பஞ்சாப் தேர்தலில் பாஜக கேம்?

தமிழகத்தை முந்திய ஆந்திரா! ரூ.1,614 கோடி கொரிய முதலீடுகள் கைமாறின!

சென்னை,நவ. 02–

தமிழ்நாட்டில் முதலீடு செய்யப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட மூன்று தென்கொரிய வாகன உதிரிபாக நிறுவ னங்கள், ஆந்திராவில் ரூ.1,614 கோடி முதலீடு செய்ய ஒப்பந்தம் செய்துள்ளன.

ஹூண்டாய், கியா நிறுவனங்களுக்கு உதிரிபாகங்கள் வழங்கும் ஹ்வாஷின் ரூ.850 கோடி, செஷான் ரூ.514 கோடி, ஐவாமெட் ரூ.250 கோடி முதலீடு செய்ய உள்ளன. ஆந்திராவின் அனந்தபூர் மாவட்டத்தில் அமையும் இத்தொழிற்சா லைகள் மூலம் 1,418 நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




ஆந்திர அமைச்சர் நர லோகேஷின் தென்கொரியப் பயணத்தைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. தமிழகத்தில் முதலீடு செய்வது குறித்து முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்ற நிலையில், ஆந்திராவுக்கு முதலீடுகள் சென்றிருப்பது தொழில்துறை வட்டாரத்தில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

புதுக்கோட்டையில் முதல்வர்! வரவேற்ற மக்கள்!!

புதுக்கோட்டை, நவ. 02–

புதுக்கோட்டை ஆயுதப்படை திடலில் நடைபெறும் அரசு விழாவில், ரூ. 24.5 கோடியில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையம், ரூ. 4 கோடியில் கட்டப்பட்ட நவீன உள்விளை யாட்டு அரங்கம் உள்பட மாவட்டத்தில் நிறைவடைந்த திட்டப் பணிகளை தொடக்கி வைப்பதற்காக முதல்வர் விஜய் புதுக்கோட்டை வருகிறார்.



இதற்காக, சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் முதல்வர் விஜய் திருச்சி வந்தடைந்தார். பின்னர், திருச்சி விமான நிலையத்திலிருந்து சாலை வழியாக சுமார் 55 கி.மீ தூரம் வாகனத்தில் செல்லும் முதல்வர் விஜய்யை சாலையின் இருபுறமும் திரண்ட மக்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

இதனிடையே, புதுக்கோட்டையில் அரசு விழாவுக்காக தயார் செய்யப்பட்ட பிரம்மாண்ட அரங்கை விட்டுவிட்டு, ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கிலேயே விழாவை நடத்திட திடீர் முடிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ரூ.100 கோடியில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்தார் முதல்வர் விஜய்!!

புதுக்கோட்டை, நவ. 02–

புதுக்கோட்டையில் வேளாண் துறை சார்பில் பயனாளிகளுக்கு வேளாண் கருவிகளை வழங்கினார் முதல்வர் விஜய். விழா அரங்கில் வைக்கப்பட்டிருந்த பாரம்பரிய பயிர் வகைகளை முதல்வர் பார்வையிட்டார். ரூ.100 கோடியில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்தார் முதல்வர்.



அடுத்தடுத்து புயல்கள்! முதல்வர் விஜய்யிடம் உதவி கோரிய சந்திரபாபு நாயுடு!

சென்னை, நவ. 02–

தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய்க்கு ஞாயிற்றுக்கிழமை தொலைப்பேசியில் தொடர்புகொண்டு பேசிய ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, மீட்புப் பணிகளுக்கான உதவிகளைக் கோரியுள்ளார்.

இதுதொடர்பாக ஆந்திரப் பிரதேச முதல்வர் அலுவலகம் வெளியிட்டிருக்கும் பதிவில், "புயல் பாதிப்புச் சூழலில், ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, மின் கட்டமைப்புகளைச் சீரமைக்கத் தமிழக அரசின் உதவியைக் கோரினார்.



புயலால் ஏராளமான மின் கம்பங்கள் சேதமடைந்துள்ள நிலையில், அவற்றைச் சீ ர மை ப் ப தற் கா ன ப ணி யா ள ர் க ளை யும் இயந்திரங்களையும் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். இதற்குத் தமிழ்நாடு முதலமைச்சர் சாதகமான பதிலை அளித்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டாஸ்மாக் தனியார்மயமாகிறதா? - அமைச்சர் விக்னேஷ் விளக்கம்!

சென்னை, நவ. 02–

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் விக்னேஷ் சென்னையில் இன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது; டாஸ்மாக் தனியார் மயமாக்குவது பற்றியும் ஆராய்ந்து வருகிறோம். டாஸ்மாக் தனியார்மயமே ஆகாது என்று நாங்கள் கூறவில்லை. 2003ல் ஜெயலலிதா எதற்காக தனியார் மதுக்கடைகளை மூடினார் என்பதையும் பார்க்க வேண்டும். இவ்வளவு பெரிய முடிவு எடுப்பதற்கான சூழலையும் நாம் பார்க்க வேண்டியுள்ளது"என்றார். டாஸ்மாக் கடை ஊழியர்கள் நேற்று திடீரென கடையை மூடி போராட்டம் நடத்திய நிலையில், அமைச்சர் விக்னேஷின் இந்த பேச்சு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தமிழகத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 40 டாஸ்மாக் மதுபான கடைகள் செயல் பட்டு வருகின்றன. நேற்று முதல் காலி மதுபாட்டில்களுக்கு 10 ரூபாய் திரும்ப கொடுக்கும் நடைமுறையை அமல்படுத்த வேண்டும் என டாஸ்மாக் பணியாளர் களுக்கு நிர்வாகம் அறிவித்து இருந்தது. ஒரு நாளைக்கு 2 ஆயிரம் மதுபாட்டில்கள் வரை திரும்ப பெறுவதாக இருந்தால் அந்த கடைக்கு ஒரு பணியாளரை நியமித்து அவருக்கு ஒரு நாளைக்கு 1000 ரூபாய் சம்பளம் வழங்கும் வகையிலும், 2 ஆயிரம் மதுபாட்டில்களுக்கு மேல் திரும்ப பெறுவதாக இருந்தால் ஒரு நாளைக்கு 2 ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கும் வகையிலும் ஆட்களை நியமித்து கொள்ளலாம் என டாஸ்மாக் நிர்வா கம் உத்தரவிட்டது. ஆனால், காலி மதுபாட்டில்களை திரும்ப பெறுவதற்கான இடவசதி உள்ளிட்டவை முறையாக செய்து தரப்படவில்லை என குற்றச்சா ட்டு எழுந்தது. அதுமட்டுமல்லாமல் காலி மதுபாட்டில்களை திரும்ப பெறும் திட்டத்துக்காக ஒரு மதுபாட்டிலை 3 தடவை ஸ்கேன் செய்ய வேண்டியது இருப்பதாகவும், இது மது பாட்டில்கள் அதிகம் விற்பனையாகும் கடைகளில் பெரும் சிரமத்தை ஏற்படுத்து வதாகவும் புகார் கூறப்பட்டது.

இந்த நடைமுறை சிக்கலை சுட்டிக்காட்டி நேற்று தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் டாஸ்மாக் பணியாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதாவது, பொதுவாக பகல் 12 மணிக்கு டாஸ்மாக் கடைகள் திறக்கப்படும். ஆனால், பல இடங்களில் டாஸ்மாக் பணியாளர்கள் பகல் 12 மணிக்கு கடை களை திறக்காமல் போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தால், தமிழகம் முழுவதும் 460 கடைகள் அடைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட டாஸ்மாக் ஊழியர்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள டாஸ்மாக் மாவட்ட மேலாளர்கள் மற்றும் முதுநிலை மேலாளர்கள் அலுவலகம் முன்பு கூடி போராட் டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் டாஸ்மாக் அலுவலகங்களில் சங்க நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால், இதில் எந்த முடி வும் எட்டப்படவில்லை.

டாஸ்மாக் கடைகள் திறக்கப்படாத இடங்களில் மதுபாட்டில்கள் கிடைக்காமல் மதுப்பிரியர்கள் திக்குமுக்காடினர். நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் வழக்கத்தை விட மதுப்பிரியர்கள் அதிகம் பேர் கடைகளின் முன்பு திரண்டிருந்தனர்.

தீபாவளி ஸ்பெஷல்: அமெரிக்க அரசியலில் அதிரடி!

டிரம்ப் ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் வேட்டு? விஸ்வரூபம் எடுக்கும் 'ஜனநாயகம்'!

7 மாநில கருத்துக்கணிப்பில் பரபரப்பு!!

வாஷிங்டன், நவ. 02–

அமெரிக்காவில் நவம்பர் 3–ஆம் தேதி நடைபெறவுள்ள இடைக்காலத் தேர்தல் அதிபர் டொனால்டு டிரம்பின் குடியரசுக் கட்சிக்கு முக்கியச் சோதனையாக அமைந்துள்ளது. நியூயார்க் டைம்ஸ்சியேனா கருத்துக்க ணிப்பில், செனட் தேர்தல் நடைபெறும் ஏழு முக்கிய மாநிலங்களில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்கள் முன்னிலையில் இருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது.



மிச்சிகன், டெக்சாஸ், மெய்ன் மாநிலங்களில் ஜனநாயகக் கட்சிக்கு 51 சதவீதத்துக்கும் அதிகமான ஆதரவும், அயோவா, அலாஸ்கா, கன்சாஸ், ஓஹியோ மாநிலங்களில் 48 முதல் 49 சதவீத ஆதரவும் இருப்பதாகக் கூறப்படுகிறது. குடியரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு 42 முதல் 47 சதவீத ஆதரவு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு ள்ளது. செனட் பெரும்பான்மையை குடியரசுக் கட்சி இழந்தால், டிரம்ப் அரசின் சட்டங்கள், முக்கிய நியமனங்கள் மற்றும் கொள்கை முடிவுகளை நிறைவேற்றுவதில் சிக்கல்கள் ஏற்படலாம். குறிப்பாக குடியேற்றக் கொள்கை, எச்–1பி விசா மற்றும் வெளியுறவுக் கொள்கை தொடர்பான நடவடிக்கைகள் கூடுதல் அரசியல் கண்காணிப்பைச் சந்திக்கக்கூ டும். அமெரிக்க இடைக்காலத் தேர்தலில் பிரதிநிதிகள் சபையின் 435 இடங்களுக்கும், செனட்டில் சுமார் மூன்றில் ஒரு பங்கு இடங்களுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. டெக்சாஸ், கன்சாஸ் போன்ற குடியரசுக் கட்சியின் பாரம்பரிய ஆதரவு மாநிலங்களில் நிலவும் போட்டி தேசிய அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

கருத்துக்கணிப்பு நிலவரம்: நவம்பர் 1–ஆம் தேதி வெளியான சியேனா ஆய்வின்படி, மிச்சிகனில் ஜனநாயகக் கட்சி 11 புள்ளிகளும், டெக்சாஸில் 7 புள்ளிகளும் முன்னிலையில் உள்ளது. அலாஸ்கா, அயோவாவில் போட்டி மிக நெருக்கமாக உள்ளது. தேர்தல் முடிவை முன்கூட்டியே உறுதியாகக் கூற முடியாது என ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரூ.634 கோடி லஞ்சப் புகார்: கே.என். நேருவுக்கு உச்சநீதிமன்றத்தில் பின்னடைவு!



புதுடெல்லி, நவ. 03–

திமுக ஆட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சராக இருந்த கே.என். நேரு மீது, பணி நியமனங்களுக்காக ரூ.634 கோடி லஞ்சம் பெற்றதாகப் புகார் எழுந்தது.

இதுதொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை நடத்திய சோதனையில் முக்கிய ஆவணங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த விவகாரத்தில் நேரு மீது வழக்குப்பதிவு செய்ய சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இன்று நடைபெற்ற விசாரணையில், உயர்நீதிமன்ற உத்தரவை ரத்து செய்ய உச்சநீதிமன்றம் மறுத்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ரூ.100 கோடி லஞ்சப் புகார்: முன்னாள் அமைச்சர் மகேஷுக்கு மீண்டும் போலீஸ் காவல்!



சென்னை, நவ. 03–


தனியார் பள்ளிகளுக்கு அரசு அனுமதி வழங்க ரூ.100 கோடி லஞ்சம் பெற்றதாக எழுந்த புகாரில், அக்டோபர் 26–ஆம் தேதி கைது செய்யப்பட்ட திமுக முன்னாள் அமைச்சர் மகேஷுக்கு மீண்டும் போலீஸ் காவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த வழக்கில் திமுக நிர்வாகிகள் அரசகுமார், முத்துக்குமார் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மகேஷை 5 நாட்கள் காவலில் விசாரிக்க போலீசார் கோரிய நிலையில், நவம்பர் 2 மதியம் 1 மணி முதல் நவம்பர் 4 மாலை 5 மணி வரை விசாரிக்க சென்னை சிறப்பு நீதிமன்றம் அனுமதித்துள்ளதாகக் கூறப்படுகிறது. விசாரணையின்போது வழக்கறிஞர் உடனிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மகேஷின் ஜாமின் மனு நவம்பர் 5–ஆம் தேதி விசாரணைக்கு வருகிறது.

'முரசு புயல்' எங்கே இருக்கிறது? சென்னைக்கு ஜாக்பாட் அடிக்குமா?

சென்னை, நவ. 02–

வங்கக் கடலில் நிலவும் முரசு புயல் சின்னம் தற்போது எங்கே இருக்கிறது? சென்னைக்கான மழை வாய்ப்பு என்ன என்பது குறித்து வானிலை நிலவரங்களை கணித்து சமூக வலைத்தளத்தில் வழங்கி வரும் தமிழ்நாடு வெதர்மேன் எனப்படும் பிரதீப் ஜான் வெளியிட்டுள்ளார்.



அவர் தன்னுடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் கூறியிருப்பதாவது, முரசு (Murasu) புயல் இப்போது எங்கே உள்ளது? இது மிக அதிவேகமாக நகர்ந்து, நெல்லூர் – காவலி பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தற்போது இது சென்னை அட்சரேகைக்கு வடக்கே கடந்துவிட்டது.

சென்னைக்கு முரசு புயலால் என்ன காத்திருக்கிறது? மேகங்கள் மேற்கு நோக்கி நகரும்போது, அவை சென்னையின் மீது, குறிப்பாக வட மற்றும் மத்திய சென்னையின் மீது படரக்கூடும். மேகங்களின் ஒரு குறிப்பிட்ட பகுதி மிகவும் அடர்த்தியாகத் தெரிகிறது; நல்வாய்ப்பாக அந்த மேகங்கள் சென்னையின் மீது அமைந்தால், நல்ல மழை பொழிய வாய்ப்புள்ளது என்று பதிவிட்டுள்ளார்.

வங்கக் கடலில் நிலவும் முரசு புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரத்தில் பகல் 1 மணி வரை மிதமான மழைக்கு வாயப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், சென்னையில் கடந்த 24 மணி நேரத்தில் 15 செ.மீ. மழை பதிவாகியிருக்கிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

2026–ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழை தொடங்கி, இரண்டாவது காற்றழுத்த தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) தெற்கு அந்தமான் கடலில் அக். 29–ஆம் தேதி உருவானது. இந்தப் புயல் சின்னம் அக்.30–ஆம் தேதி ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக தென்கிழக்கு வங்கக் கடலில் நிலவியது. அடுத்து மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து அக்.31 காலை 11.30 மணியளவில் அதே பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது.

ஞாயிறு காலை மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து வலுவடைந்து தென்மேற்கு மற்றும் அதையொட்டிய மத்திய மேற்கு பகுதிகளில் காலை 11.30 மணிக்கு 'முரசு' புயலாக வலுப்பெற்றது.

இந்தப் புயல் மேலும் மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் தீவிர புயலாக வலுப்பெற்று, மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கு அருகில் நெல்லூர் மற்றும் நரசாப்பூர் இடையே திங்கள்கிழமை நள்ளிரவு முதல் நவ. 3 அதிகாலை வரையிலான இடைப்பட்ட நேரத்தில் கரையைக் கடக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

தலையங்கம்

மதுரை மணி

திங்கட்கிழமை 02.11.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஐப்பசி மாதம் 16-ம் தேதி

சிறைக்குள் பாதுகாப்பா? குற்றவாளிகளுக்குச் சுதந்திரமா? புழல் முதல் தேனி வரை தப்பிய கைதிகள்!



தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய சிறைச்சாலைகளின் பாதுகாப்பே இன்று கேள்விக்குறியாகி இருப்பது மிகுந்த கவலையளிக்கிறது. குற்றவாளிகளைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தி, அவர்களைச் சீர்திருத்த வேண்டிய சிறைச்சாலைகளிலிருந்தே கைதிகள் தப்பியோடுவது சாதாரண நிர்வாகத் தவறாகக் கருதப்பட முடியாது.

சென்னை புழல் மத்திய சிறையில் பலத்த பாதுகாப்பையும் மீறி இரண்டு கைதிகள் தப்பியதாக வெளியான தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டாலும், பாதுகாப்பு வளையத்தை எவ்வாறு கடந்து சென்றார்கள் என்ற கேள்விக்கு வெளிப்படையான பதில் தேவை.

இந்தப் பரபரப்பு அடங்குவதற்குள் தேனி சிறையிலிருந்து 17 கைதிகள் தப்பியதாக வெளியான செய்தி மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவர்களும் பின்னர் பிடிபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைதிகளை மீண்டும் பிடிப்பது காவல்துறையின் கடமை; ஆனால் அவர்கள் தப்பிச் செல்ல முடியாத பாதுகாப்பை உருவாக்குவதே சிறைத்துறையின் அடிப்படைப் பொறுப்பு.

சம்பவங்களைத் தொடர்ந்து சில சிறைப் பணியாளர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதாகவும், உயரதிகாரிகள் மாற்றப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் அதிகாரிகளை மாற்றுவதால் மட்டும் சிறைத்துறையின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா?

சிறைகளுக்குள் செல்போன், போதைப்பொருள் உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட பொருள்கள் நுழைவதாகத் தொடர்ந்து எழும் புகார்கள் தீவிரமாக விசாரிக்கப்பட வேண்டும். இதற்கு உடந்தையாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும், உரிய ஆதாரங்களின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் சிறுவர் சீர்திருத்த மையங்கள் உட்பட 125 சிறைகள், 23,608 சிறைவாசிகள், 5,489 பணியாளர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. சில சிறைகளில் காவலர் பற்றாக்குறை நிலவுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய சூழலில் பாதுகாப்பு, கண்காணிப்பு, பணியாளர் நியமனம் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்வது அவசியமாகிறது.


ஒவ்வொரு சிறையிலும் பாதுகாப்புத் தணிக்கை நடத்தப்பட வேண்டும். கண்காணிப்பு கேமராக்கள், அவசர எச்சரிக்கை அமைப்புகள், சுற்றுச்சுவர் பாதுகாப்பு, இரவுநேரக் காவல் ஆகியவை முறையாகச் செயல்படுவதை உறுதிசெய்ய வேண்டும். பணியாளர் பற்றாக்குறையைப் போக்குவதுடன், சிறைவாசிகளுக்கான சீர்திருத்த நடவடிக்கைகளையும் வலுப்படுத்த வேண்டும்.

சிறைச்சாலை என்பது குற்றவாளிகள் தப்பிச் செல்லும் வழியாகவும் இருக்கக்கூடாது; மனித உரிமைகள் மறுக்கப்படும் இடமாகவும் மாறக்கூடாது. பாதுகாப்பும் சீர்திருத்தமும் இணைந்த நிர்வாகமே சிறந்த சிறை நிர்வாகமாகும்.


தமிழக அரசு ஒவ்வொரு சம்பவத்திற்கும் தற்காலிக நடவடிக்கை எடுப்பதோடு நின்றுவிடாமல், சிறைத்துறையில் நீண்டகாலச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

இரும்புக் கதவுகளின் வலிமையால் மட்டும் சிறையின் பாதுகாப்பை உறுதிசெய்ய முடியாது. நேர்மையான நிர்வாகமும் பொறுப்பான கண்காணிப்பும்தான் உண்மையான பாதுகாப்பு!

ஆசிரியர்,
மதுரை மணி



கரூர் வெண்ணைமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 44–வது ஆண்டு விளையாட்டு விழா நடந்தது. பள்ளி தாளாளர் கே.பாண்டியன் தலைமை வகித்தார். செயலாளர் கே.பெரியசாமி முன்னிலை வகித்தார். முதல்வர் பழனியப்பன் வரவேற்றார். சர்வதேச பாரா தடகள வீரரும், பயிற்சியாளருமான மதுரை ரஞ்சித் குமார் கரூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அலுவலர் டேவிட் டேனியல் ஆகியோர் பேசினார். மாணவமாணவிகளின் கலை நிகழ்ச்சி, உடற்பயிற்சி , பிரமிடு சாகச , யோகா, அணி வகுப்பு உட்பட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பள்ளித் தலைமை ஆசிரியை நளினிப்ரியா நன்றி கூறினார்..



கரூரில் நடந்த மாநில அளவிலான கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாநில நிர்வாகிகள் ஜீவா ஆண்டனி நந்தகுமார் ரவிச்சந்திரன் பாலசுப்பிரமணியம் கருர் ராமதாஸ் ஆகியோர் பரிசு வழங்கினார்.



ஈரோடு தமிழக வெற்றி கழகம், தின்டல் பகுதி கழகம் KKT. V. முருகேசன் ஏற்பாட்டில் வெட்டுக்காட்டு வலசில் 19 வது வார்டில் புதிய அலுவலகம் திறப்பு விழா, மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்கள் 500 பேருக்கு வேஷ்டி, சேலை, அரிசி ஆகிய பொருட்கள் அடங்கிய தொகுப்பை கைத்தறித்துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி கலந்து கொண்டு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் கோபி கிருஷ்ணா, மாவட்ட துணை அமைப்பாளர் கவின் குமார், பகுதி கழக செயலாளர் பரத் குமார், வட்ட செயலாளர் சீனிவாசன் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், பருவாய் ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.முத்துக்குமரன் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தார்கள். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி வாணிஈஸ்வரி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி மதுரா, திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர்கள் திரு. சிவபிரகாஷ்,உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) திரு. சதிஸ்குமார், திரு. கமலக்கண்ணன் ஆகியோர் உள்ளனர்.

ஏப். 1 முதல் பிளாஸ்டிக் நோட்டுகள்?

புதுடெல்லி, நவ. 02–

இந்திய ரிசர்வ் வங்கி 2027 ஏப்ரல் 1 முதல் ரூ.10 மற்றும் ரூ.20 மதிப்பிலான பாலிமர் (பிளாஸ்டிக்) நோட்டுகளைச் சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. முதற்கட்டமாக தலா 100 கோடி நோட்டுகள் அச்சிடப்படலாம் எனக் கூறப்படுகிறது. காகித நோட்டுகளைவிட நீண்ட காலம் உழைக்கும் வகையில் தயாரிக்கப்படும் இந்நோட்டுகளின்



அளவில் மாற்றம் இருக்காது என்றும் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

புதிய நோட்டுகள் அறிமுகமானாலும் தற்போது புழக்கத்தில் உள்ள ரூ.10, ரூ.20 காகித நோட்டுகள் தொடர்ந்து செல்லுபடியாகும் எனச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், புதிய ரூ.1,000 நோட்டு வெளியிடப்படுவதாகப் பரவும் தகவல் தவறானது என PIB விளக்கம் அளித்துள்ளது.

குறிப்பு: பாலிமர் நோட்டுகள் வெளியிடப்படும் தேதி மற்றும் எண்ணிக்கை குறித்த அதிகாரப்பூர்வ RBI அறிவிப்பு தனியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

PF பேலன்ஸ் இனி வாட்ஸ் அப்பிலேயே! EPFO புதிய வசதி அறிமுகம்!

புதுடெல்லி, நவ. 02–

பிஎஃப் சந்தாதாரர்கள் தங்களது கணக்கு இருப்பு, பாஸ்புக் விவரங்கள் மற்றும் கடைசி 5 பரிவர்த்தனைகளை வாட்ஸ்அப் மூலம் அறிந்துகொ ள்ளும் புதிய சேவையை மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் மன்சுக் மாண்ட்வியா அறிமுகப்ப டுத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. EPFO–வின் 74–வது நிறுவன நாள் விழாவில் அறிமுகப்படுத்தப்ப ட்டதாகக் கூறப்படும்



இச்சேவை, 24 மணி நேரமும் பல மொழிகளில் செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டு ள்ளது. இதற்காக 8796441800 என்ற எண்ணுக்கு 'Hello' என அனுப்பி, மொழியைத் தேர்ந்தெடுத்து தேவையான கணக்கு விவரங்களைப் பெறலாம் எனச் செய்தியில் குறிப்பிடப்பட்டு ள்ளது. மேலும், ஆதார் சரிபார்க்கப்பட்ட செயலற்ற பிஎஃப் கணக்குகளில் ரூ.1,000 வரை இருப்பு உள்ளவர்க ளுக்கு, உரிய சரிபார்ப்புக்குப் பிறகு தானாகவே பணம் வரவு வைக்கும் நடை முறையும் அறிவிக்கப்பட்டு ள்ளதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீராமபுரத்தில் 100-க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு தமிழக வெற்றி கழகத்தின் சார்பில்இலவச வேட்டி, சேலை மற்றும் இனிப்பு பெட்டகம் வழங்கல்!

ஒட்டன்சத்திரம். நவ 02–

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், ஸ்ரீராமபுரம் பேரூரில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் 100–க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை மற்றும் இனிப்பு பெட்டகங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் திண்டுக்கல் மத்திய மாவட்டச் செயலாளர் எம்.எல். வாசுதேவன் தலைமை தாங்கி, தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஸ்ரீராமபுரம் பேரூர் கழகச் செயலாளர் அ. அருள்குமார், பேரூர் மகளிர் அணி அமைப்பாளர் தி. அபிநயா ஆகியோர் முன்னிலை



வகித்தனர். இதில் ஸ்ரீராமபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 100–க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டு இலவச வேட்டி, சேலை மற்றும் இனிப்பு பெட்டகங்களைப் பெற்றுக் கொண்டனர்.

மேலும், இந்நிகழ்ச்சியில் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளை மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், பேரூர் பொறுப்பாளர்கள், மகளிர் அணி மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர்.

தங்களின் உழைப்பையும் சேவையையும் மதித்து நலத்திட்ட உதவிகள் வழங்கிய தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகளுக்கு தூய்மை பணியாளர்கள் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துச் சென்றனர்.

பலக்கனூத்து ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம் அடிப்படை வசதிகள் குறித்து பொதுமக்கள் சரமாரி குற்றச்சாட்டு!

ஒட்டன்சத்திரம், நவ. 02–

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பலக்கனூத்து ஊராட்சியில், ஊராட்சிகள் தினத்தை முன்னிட்டு கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வட்டார ஊராட்சி பற்றாளராகப் பணியாற்றும் பணி மேற்பார்வையாளர் தலைமையில் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளையும், குறைகளையும் முன்வைத்தனர்.

அப்போது, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தரமற்ற முறையில் இருப்பதாகவும், போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள பாலம் முறையாகப் பராமரிக்கப்படவில்லை என்றும் பொதுமக்கள் குற்றம்சாட்டினர்.


மேலும், மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி நிற்கும் தாழ்வான பகுதிகளைக் கண்டறிந்து உரிய வடிகால் வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என்றும், ஊராட்சியில் நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க முன்கூட்டியே எவ்வித முன்னெச்சரிக்கை நடவடி



க்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அடுக்கடுக்கான புகார்களைத் தெரிவித்தனர்.

இதற்கு கூட்டத்தில் கலந்து கொண்ட வட்டார ஊராட்சி பற்றாளர் மற்றும் ஊராட்சி செயலர் வீரபாண்டி உள்ளிட்டோர் பொதுமக்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தனர்.

இருப்பினும், ஊராட்சியில் அடிப்படை வசதிகளை முறையாகச் செய்து கொடுக்க வேண்டும் என்றும், பொதுமக்களின் குறைகளை உடனடியாகக் கேட்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் பங்கேற்ற மக்கள் தொடர்ந்து வலியுறுத்தினர். கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்கள் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்திற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா? என்பதே பலக்கனூத்து கிராம மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



வேலை, கல்வி, வழக்கு, பகை தீர பரிகாரங்கள்!



1. நல்ல வேலை கிடைக்க ;

சூரிய வழிபாடு: தினமும் காலையில் சூரியனுக்கு தண்ணீர் அர்ப்பணித்து (அர்க்யம்) வழிபடுவது அரசு மற்றும் நல்ல தனியார் வேலை கிடைக்க உதவும். "ஓம் சூர்யாய நமஹ" என்ற மந்திரத்தை 21 முறை கூறலாம்.

சனிக்கிழமை தானம்: சனிக்கிழமைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கோ அல்லது ஏழைகளுக்கோ கருப்பு உளுந்து, நல்லெண்ணெய் அல்லது உணவு தானம் செய்வது தொழில் மற்றும் வேலையில் உள்ள தடைகளை நீக்கும்.

பைரவர் வழிபாடு: ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் பைரவருக்கு முந்திரி மாலை சாற்றி, மிளகு தீபம் ஏற்றி வழிபட வேலை வாய்ப்புகள் தேடி வரும்.

2. கல்வியில் தேர்ச்சி பெற:

புதன் மற்றும் சரஸ்வதி வழிபாடு: புதன்கிழமைகளில் வித்யாகாரகனான புதன் பகவானுக்கும், கல்விக்கடவுளான சரஸ்வதி தேவிக்கும் நெய் தீபம் ஏற்றி வழிபட வேண்டும்.

பசுவிற்கு அகத்திக்கீரை: புதன்கிழமைகளில் பசு மாட்டிற்கு அகத்திக்கீரை அல்லது பச்சரிசி வெல்லம் கொடுப்பது புதன் கிரகத்தின் அருளைப் பெற்றுத் தரும். இது ஞாபக சக்தியையும் (கவனக்குவிப்பு) வையும் அதிகரிக்கும்.

மந்திரம்: தினமும் படிப்பதற்கு முன் "சரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி..." அல்லது ஹயக்ரீவர் ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்வது நல்லது.

3. வழக்குகளில் வெற்றி பெற :

ஸ்ரீ நரசிம்மர்/பிரத்யங்கிரா வழிபாடு: செவ்வாய் அல்லது சனிக்கிழமைகளில் லட்சுமி நரசிம்மர் அல்லது பிரத்யங்கிரா தேவி கோவிலுக்குச் சென்று எலுமிச்சை பழ தீபம் ஏற்றி வழிபட தீராத வழக்குகளும் சாதகமாகும்.

செவ்வாய் கிரகம்: வழக்குகளுக்கு காரகனான செவ்வாய் பகவானின் அருளைப் பெற முருகப்பெருமானுக்கு செவ்வரளி பூ மாலை சாற்றி, துவரம் பருப்பு தானம் செய்யலாம்.

பஞ்சமுக அனுமன்: வீட்டில் பஞ்சமுக அனுமன் படம் வைத்து, அவருக்கு நெய் தீபம் ஏற்றி, "ஹனுமான் சாலிசா" படித்து வர சட்ட ரீதியான பிரச்சனைகள் அகலும்.

4. பகை அகல / எதிரிகள் தொல்லை நீங்க ;

ஸ்ரீ காலபைரவர் வழிபாடு: தேய்பிறை அஷ்டமி திதியில் காலபைரவருக்கு செவ்வரளி பூக்களால் அர்ச்சனை செய்து, மிளகு தீபம் (சிவப்பு துணியில் மிளகை முடிந்து நல்லெண்ணெயில் நனைத்து ஏற்றுவது) ஏற்றினால் மறைமுக மற்றும் நேர்முக எதிர்ப்புகள் யாவும் நீங்கும்.

சுதர்சன மகா மந்திரம்: வீட்டில் தினமும் சுதர்சன அஷ்டகம் அல்லது மகா விஷ்ணுவின் நாமங்களை உச்சரித்து வர தீய சக்திகளும், பகைவர்களின் சூழ்ச்சிகளும் முறியடிக்கப்படும்.

உப்பு பரிகாரம்: குளிக்கும் தண்ணீரில் சிறிதளவு கல் உப்பு சேர்த்து குளிப்பது மற்றும் வீட்டை கல் உப்பு கலந்த நீரால் துடைப்பது திருஷ்டி மற்றும் பிறரின் பொறாமைப் பார்வையின் தாக்கத்தைக் குறைக்கும்.

பொதுவான குறிப்பு: எந்தவொரு பரிகாரமும் முழுமையான பலன் தர, உங்களது விடாமுயற்சியும், நேர்மையான எண்ணமும் மிக முக்கியம். உங்களின் தனிப்பட்ட ஜாதக அமைப்பிற்கு ஏற்ப துல்லியமான பரிகாரங்களை அறிய, தகுந்த ஜோதிடரை அணுகுவது மேலும் சிறப்பாகும்.



அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியின் முன்னாள் தலைவர் தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் என வாழ்ந்த பசும்பொன் தேவர் திருமகனார் ஜெயந்தி விழாவினை முன்னிட்டு திருமுருகன் பூண்டி பகுதியில் மாவட்ட தலைவர் தோழர் தாமோதரன் அவர்களது ஏற்பாட்டில் நடைபெற்ற தேவர் ஜெயந்தி விழாவில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது விழாவினை தொழிற்சங்க மாநில துணைத்தலைவர் மத்திய குழு உறுப்பினர் மாவட்ட பொதுச் செயலாளருமான தேரி காளிமுத்து தேவர் துவக்கி வைத்தார் இந்த நிகழ்வில் மாவட்ட தலைவர் தாமோதரன். மத்திய குழு உறுப்பினர் ராஜசேகர். மாவட்ட துணைத்தலைவர் வெள்ளத்துரை. பிரபு. மாவட்டத் துணைச் செயலாளர் சுப்பையா. மாவட்ட செயலாளர் கார்த்திக். மாவட்ட தொழிற்சங்க செயலாளர் ரமேஷ். மாவட்ட இளைஞரணி செயலாளர் சரவணன். மாவட்ட மாணவர் அணி துணைச் செயலாளர் பூமிநாதன். தகவல் தொழில்நுட்ப பிரிவு அமரன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்...

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



இதயத்தைப் பாதுகாக்கும் 4 பானங்கள்!



இதயத்திற்கு ரத்தத்தை வழங்கும் தமனிகளில் கொழுப்புப் படிவங்கள் சேரும்போது ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு மாரடைப்பு அபாயம் அதிகரிக்கிறது. இதய ஆரோக்கியத்தைப் பராமரிக்க சில இயற்கைப் பானங்கள் உதவக்கூடும்.


கிரீன் டீ: ஆன்டி–ஆக்ஸிடன்ட்டுகள் நிறைந்துள்ளதால் ரத்த நாளங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க உதவும்.

மாதுளை ஜூஸ்: அழற்சியைக் குறைக்க உதவும் ஆன்டி–ஆக்ஸிடன்ட்டுகள் நிறைந்துள்ளது.

பீட்ரூட் ஜூஸ்: நைட்ரேட்டுகள் இருப்பதால் ரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும் உதவக்கூடும்.

மஞ்சள் பால்: மஞ்சளில் உள்ள குர்குமின் அழற்சி எதிர்ப்புப் பண்புகளைக் கொண்டுள்ளது. இதய ஆரோக்கியத்தில் அதன் நேரடிப் பலன்களுக்கு மேலும் ஆய்வுகள் தேவை.

முக்கிய குறிப்பு: எந்தப் பானமும் ரத்தக்குழாய் அடைப்புகளை அகற்றாது. சத்தான உணவு, உடற்பயிற்சி, ரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பைக் கட்டுப்படுத்துதல் ஆகியவையே இதயப் பாதுகாப்பிற்கு முக்கியம். மருத்துவச் சிகிச்சைக்கு மாற்றாக இப்பானங்களைப் பயன்படுத்தக்கூடாது.



சினிமா துளிகள்..!

10 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் இணையும் சிம்பு-நயன்தாரா!



தமிழ் திரையுலகில் பிரபலமான சிம்பு நயன்தாரா ஜோடி, 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இணைந்து நடிக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.


'ட்யூட்' பட இயக்குநர் கீர்த்திஸ்வரன் இயக்கும் புதிய படத்தில் இருவரும் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கான படப்பிடிப்பு டிசம்பர் மாதம் தொடங்க வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2006–ல் 'வல்லவன்', 2016–ல் 'இது நம்ம ஆளு' ஆகிய படங்களில் இருவரும் இணைந்து நடித்திருந்தனர்.

தற்போது சிம்பு, வெற்றிமாறன் இயக்கத்தில் 'அரசன்' படத்தில் நடித்து வருகிறார். நயன்தாராவின் 'மூக்குத்தி அம்மன் 2' நவம்பர் 6–ஆம் தேதி வெளியாகவுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிம்பு நயன்தாரா மீண்டும் இணைவது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை. இருப்பினும் இந்தத் தகவல் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் சினிமாவில் உருவாகும் பிளாக்பஸ்டர் கூட்டணி!



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களான சூர்யா மற்றும் தனுஷ் இருவரும் இணைந்து ஒரு புதிய திரைப்படத்தில் நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடிகர் சூர்யா மற்றும் தனுஷ் இருவரை மையமாக கொண்ட ஒரு வலுவான கதையை இயக்குநர் மணிரத்னம் உருவாக்கயுள்ளதாகவும், அதில் கதாநாயகர்களாக சூர்யா மற்றும் தனுஷ் ஆகிய இருவரையும் நடிக்க வைக்க திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதற்காக இருவரிடமும் இயக்குநர் மணிரத்னம் கதை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும், இருநடிகர்களும் இக்கதையில் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் படத்திற்கான கால்ஷீட் மற்றும் சம்பளம் குறித்த பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும், அனைத்து பேச்சுவார்த்தைதைகளும் சுமூகமாக முடிந்தால் விரைவில் புதுப்படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதற்கிடையே, இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் விஜய் சேதுபதி மற்றும் சாய் பல்லவி நடித்து வரும் 'இஞ்சி வெல்லம்' படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது. ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ள இப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் திரைக்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

புதுக்கோட்டை, ஈரோட்டில் முதல்வர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் திடீர் இடமாற்றம்!

சென்னை, நவ. 02–

புதுக்கோட்டை, ஈரோட்டில் முதல்வர் பங்கேற்கவுள்ள நிகழ்ச்சிகளின் இடங்கள் திடீரென மாற்றப்பட்டுள்ளது

புதுக்கோட்டையில் முதல்வர் ஜோசப் விஜய் பங்கேற்கும் அரசு விழாவுக்காக தயார் செய்யப்பட்ட பிரம்மாண்ட அரங்கை விட்டுவிட்டு, ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கிலேயே விழாவை நடத்திட திடீர் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய பேருந்து நிலையம், நவீன உள் விளையாட்டரங்கம் உள்ளிட்ட முடிவுற்ற திட்டப்பணிகளைத் தொடங்கி வைக்கவும், பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கவும் முதல்வர் ஜோசப் விஜய் திங்கள்கிழமை காலை புதுக்கோட்டை வருகிறார். சென்னை யிலிருந்து தனி விமானம் மூலம் திருச்சி வரும் முதல்வர், சாலை வழியாக புதுக்கோட்டை வந்தடைகிறார்.

அரசு விழாவுக்காக ஆயுதப்படை திடலில் சுமார் 3 ஆயிரம் பேர் பங்கேற்கும் வகையில் பிரம்மாண்ட அரங்கம் அமைக்கும் பணிகள் கடந்த 4 நாள்களாக நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு அவசர அவசரமாக ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர்கள், ஆட்சி யர் உள்ளிட்ட முக்கிய அலுவலர்கள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது.



இதனைத் தொடர்ந்து, விழா நடைபெறும் இடத்தை ஆயுதப்படை திடலில் இருந்து, ஆட்சியர் அலுவலகத்துக்கே மாற்றுவது என முடிவு செய்யப்பட்டு, அதிகாலையில் அவசர அவசரமாக ஆட்சியர் அலுவலக வளாகத்தை தூய்மைப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதல்வரின் பாதுகாப்புப் படையினரும், வெளிமாவட்டங்களில் இருந்து வந்துள்ள காவல்துறை உயர் அலுவலர்களும் ஆட்சியர் அலுவலக வளாகத்தை முழுமையாக தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். ஆட்சியர் அலுவலகத்தைப் பொருத்தவரை, தொண்டைமான் மன்னர்கள் காலத்தைச் சேர்ந்த அரண்மனையாகும். இந்த வளாகம் 100 ஏக்கர் பரபரப்பளவைக் கொண்டிருந்தா லும், கட்டுமானப் பகுதி சிறியதுதான்.

மூன்றாம் தளத்திலுள்ள கூட்ட அரங்கு என்பது 100 பேர் மட்டுமே அமரும் வசதி கொண்டது. விழாவில் ஆயிரக்கணக்கான பயனாளி களுக்குத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், மாற்றப்பட்ட இடத்துக்குள் பயனாளி களை எப்படி அடக்கப் போகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இரு லிப்ட் வசதிகள் இருந்தாலும் அதிகாரிகள், அமைச்சர்கள் சென்று வருவதற்கே போதுமானதாக இருக்கப் போவதில்லை. இடமாற்றம் என்பதற்கு பாதுகாப்புக் காரணங்கள் மட்டும் காரணம் என காவல்துறையினர் விளக்கமளிக்கின்றனர்.

ஈரோடு

பெருந்துறை வாய்க்கால் மேட்டில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை (நவ. 3) முதல்வர் விஜய் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சி வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 9,000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1,110 கோடி ரூபாய் வங்கி நிதி இணைப்பு வழங்கும் விழாவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொண்டு வந்தன. இந்நிலையில், காஞ்சிகோயில் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நிகழ்ச்சி மாற்றப்பட்டுள்ளது.

இத்தகவலை மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி தெரிவித்தார்.

மறந்தே விட்டதா சிபிஎஸ்இ? எதை? பொதுத்தேர்வு அட்டவணையை!!

சென்னை, நவ.02–

2026 – 27ஆம் கல்வியாண்டில் சிபிஎஸ்இ பாடத்திட்டத்தின் கீழ் 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கான பொதுத் தேர்வு அட்டவணை இன்னமும் வெளியாகாத நிலையில், சிபிஎஸ்இ நிர்வாகம் மறந்தேவிட்டதோ என்று மாணவர்களும் பெற்றோர்களும் கலக்கத்தில் உள்ளனர்.

பொதுத் தேர்வு அட்டவணை அக்டோபர் மாதத்தில் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் நவம்பர் மாதம் வந்து விட்ட பிறகும் கூட அட்டவணை வெளியாவதற்கான சுவடே தெரியவில்லை. கடந்த ஆண்டு அக்டோபர் 30–ஆம் தேதி தேர்வு அட்டவணை வெளியான நிலையில், இன்று ஒருவேளை, சிபிஎஸ்இ தேர்வு




அட்டவணையை வெளியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில், அரசுப் பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கான தேர்வு அட்டவணை ஏற்கனவே வெளியாகிவிட்டது. மார்ச் – ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் தேர்வுக்கான அட்டவணையே வெளியான நிலையில், பிப்ரவரியில் தொடங்கும் தேர்வுக்கான அட்டவணை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக தேர்வு முடிவுகள்தான் தாமத மாக வெளியாகும், அதிலும் தப்பும் தவறுமாக மதிப்பெண்கள் போடப்பட்டு மாணவர்கள் அலைக்கழிக்கப்படுவார்கள். இந்த ஆண்டு அட்டவணைக்கே இந்த பாடுபடுகிறார்கள் மாணவர்கள். சமூக ஊட கங்களில் வெளியாகும் எந்த தகவலையும் மாணவர்கள் நம்ப வேண்டாம். cbse.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே அதிகாரப்பூ ர்வ தகவல்கள் வெளியாகும் என்பதால், மாணவர்கள் பெற்றோர் அந்த இணை யதளத்தை அவ்வப்போது பார்த்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஆம்னி பேருந்துகள் முன்பதிவுக்கு புதிய செயலி அறிமுகம்!

சென்னை, நவ. 02–

சென்னையிலிருந்து தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கு தினமும் சுமார் 1,200 ஆம்னி பேருந்துகளும், ஆந்திரம், கர்நாடகம், புதுச்சேரி, தெலங்கானா உள்ளிட்ட மாநிலங்கள் மற்றும் பகுதிகளுக்கு 600 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. தமிழகம் முழுவதும் 6,000–க்கும் மேற்பட்ட ஆம்னி பேருந்துகள் மூலம் தினமும் 2.50 லட்சத்துக்கும் அதிகமானோர் பயணம் செய்து வருகின்றனர்.

தனியார் செயலிகளால் கமிஷன் செலவு: தற்போது பெரும்பாலான பயணிகள் தனியார் இணையதளங்கள் மற்றும் செயலிகள் வாயிலாக ஆம்னி பேருந்துகளுக்கு முன்பதிவு செய்து வருகின்றனர். இதற்காக பேருந்து உரிமையாளர்கள் ஒவ்வொரு



டிக்கெட்டுக்கும் முன்பதிவுத் தளங்களுக்கு கமிஷன் தொகை செலுத்த வேண்டியுள்ளது.

இதனால் பேருந்து உரிமையாளர்களின் வருவாய் பாதிக்கப்படுவதுடன், செயல்பாட்டுச் செலவும் அதிகரிக்கிறது. மேலும், தனியார் முன்பதிவுத் தளங்களைச் சார்ந்திருப்பதால், பேருந்து உரிமையாளர்கள் தங்களது சேவைகள், இருக்கை, இருப்பு, கட்டணம் உள்ளிட்டவற்றை நிர்வகிப்பதிலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும், கமிஷன் செலவைக் குறைத்து அதன் பயனை பயணிகளுக்கு வழங்கவும் தமிழக ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கங்கள் இணைந்து ரோமி எனும் புதிய பேருந்து முன்பதிவு இணையதளம் மற்றும் செயலியை உருவாக்கியுள்ளன.

சென்னையில் நடைபெற்ற இதற்கான அறிமுக நிகழ்ச்சியில் அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அ. அன்பழகன், துணைத் தலைவர் சுனில் குமார், கோவை ஆம்னி பேருந்து உரிமை யாளர்கள் சங்க நிர்வாகிகள் செந்தில் குமார், திருமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்று செயலி மற்றும் இணைய தளத்தை தொடங்கி வைத்தனர்.

கடற்கரைகளுக்குச் செல்வதை மக்கள் தவிர்க்க வேண்டும்: தமிழக அரசு எச்சரிக்கை!

சென்னை, நவ. 02–

வங்கக் கடலில் உருவாகி யுள்ள 'முரசு' புயல் காரணமாக, திங்கள், செவ்வாய்க்கிழமை களில் (நவ.2, 3) பொதுமக்கள் கடற்கரைப் பகுதிகளுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும் என தமிழக அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை சார்பில் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட செய்தி: 'முரசு' புயல் திங்கள்கிழமை (நவ. 2) நள்ளிரவு முதல் நவ.3 அதிகாலை வரையான இடைப்பட்ட நேரத்தில் ஆந்திர கடற்கரையில் கரையைக் கடக்கக்கூடும் என்பதால், தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் மிக பலத்த மழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது. நவ. 4 வரை தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் கடல் மிகக் கொந்தளிப்பாக இருக்கும். எனவே, மீனவர்கள் இந்நாள்களில் வடக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரி



கடலோரப் பகுதிகளிலும், தென்மேற்கு வங்காள விரிகுடாவுக்கும் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம். அனைத்து மீன்பிடிப் பணிகளும் முழுமையாக நிறுத்தி வைக்கப்பட வேண்டும். தற்போது ஆழ்கடலில் உள்ள மீனவர்கள் அருகி லுள்ள துறைமுகம் அல்லது கரைக்கு உடனடியாகத் திரும்ப வேண்டும்.

படகுகளைக் கண்காணித்து, பாதுகாப்பாகக் கரைக்குத் திரும்ப வழிகாட்டும் பணியில் மீன்வளத் துறையும் துறைமுக அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

கடற்கரையைத் தவிர்க்கவும்: உயர் அலைகளும் கடல் கொந்தளிப்பு காரணமாக ஈசிஆர், ஓஎம்ஆர் போன்ற கடலோரச் சாலைகளில் நீர் தெறிக்க வாய்ப்புள்ளது. ஆகையால் புயல் கரையைக் கடக்கும் வரை பொதுமக்கள் கடற்கரைகள், கடலோரச் சாலைகள், கடல் சுவர்களுக்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

போதுமான குடிநீர், உணவுகள், மருந்துகள், அவசர விளக்குகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை கையிருப்பு வைத்துக்கொள்ள வேண்டும். அதிகாரபூர்வமற்ற அச்சமூட்டும் செய்திகளை சமூக ஊடகங்களில் பகிர்வதை தவிர்க்க வேண்டும்.

அவரச உதவிக்கு மாநில அவசர உதவி எண் – 1070, மாவட்ட அவசர உதவி எண்–1077 ஆகிய எண்களை அணுகலாம். பொதுமக்கள் தேவையற்ற அச்சத்தை தவிர்த்து, அரசின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

வேலை வாய்ப்பு

டி.எம்.பி.,/ பி.ஒ.பி., / ஃபெடரல் வங்கிகளில் வேலைகள்!



1. தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி (TMB)

பணி: துணைத் தலைமை நிதி அதிகாரி (Deputy CFO)
பணியிடம்: தூத்துக்குடி
கடைசி நாள்: 06.11.2026
இணையதளம்: https://apps.tmbdigital.bank.in/

2. பேங்க் ஆஃப் பரோடா 11 பணியிடங்கள்

பணிகள்: சீனியர் மேனேஜர், மேனேஜர், சீஃப் மேனேஜர்
பணியிடம்: இந்தியா முழுவதும்
பணி வகை: நிரந்தரம்
கடைசி நாள்: 17.11.2026
இணையதளம்: https://bankofbaroda.bank.in/

3. பேங்க் ஆஃப் பரோடா 4 உயர் அதிகாரி பணிகள்

பணிகள்: துணைத் தலைமை தொழில்நுட்ப அதிகாரி, AI பிரிவுத் தலைவர், கிளவுட் மற்றும் பிளாட்ஃபார்ம் பொறியியல் துணைத் தலைவர்கள்
பணியிடம்: மும்பை
பணி வகை: ஒப்பந்தம்
கடைசி நாள்: 17.11.2026
இணையதளம்: https://bankofbaroda.bank.in/

4. ஃபெடரல் வங்கி கலெக்ஷன் பணிகள்

பணி: CV/CE Collections
பணியிடங்கள்: மும்பை, கொல்கத்தா, மங்களூரு உள்ளிட்ட 9 நகரங்கள்
பணி வகை: நிரந்தரம்
கடைசி நாள்: 03.11.2026
இணையதளம்: https://www.federal.bank.in/

விண்ணப்பிக்கும் முறை: நான்கு வேலைவாய்ப்பு அறிவிப்புகளுக்கும் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். கல்வித்தகுதி, வயது வரம்பு மற்றும் தேர்வு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்க்கவும்.

தங்கம் விலை உயர்வு!



சென்னை, நவ. 02–

கடந்த ஒரு மாதத்தில் பவுனுக்கு ரூ.8,360 குறைந்த தங்கம் விலை, நவம்பர் மாதத்தின் இரண்டாவது நாளான இன்று ரூ.360 உயர்ந்துள்ளது.

அதன்படி, திங்கள்கிழமை(நவ.2) ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.45 உயர்ந்து, ரூ.12,775–க்கும், பவுனுக்கு ரூ.360 உயர்ந்து, ரூ.1,02,200–க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலையில் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.200–க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.2 லட்சத்துக்கு விற்பனையாகிறது.

முரசு புயல்: சென்னையில் 11 விமான சேவைகள் ரத்து!



சென்னை, நவ. 02–

வங்கக் கடலில் ஞாயிற்றுக்கிழமை உருவான 'முரசு' புயல் இன்று நள்ளிரவு ஆந்திரத்தில் கரையைக் கடக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களுக்கு மிக பலத்த மழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்க ப்பட்டுள்ளது. இதனால் மோசமான வானிலை நி ல வு வ தா ல் , சென்னையிலிருந்து புறப்படவிருந்த 5 விமானங்களும் வரவிருந்த 6 விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

சென்னையிலிருந்து திருச்சி, கடப்பா, ராஜமுந்திரி, விஜயவாடா வரை இடையே இயக்கப்படவிருந்த விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தகவல்களுக்கு பயணிகள் அந்தந்த விமான நிறுவனங்களைத் தொடர்புகொள்ளுமாறு சென்னை விமான நிலைய நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



இன்றைய கார்ட்டூன்



பஞ்சாப் தேர்தலில் பாஜக கேம்?



பஞ்சாப், நவ. 02–

ஆம் ஆத்மியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட விஜய் பிரதாப் சிங் தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார்

2027 பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலுக்கான 40 வேட்பாளர்கள் அடங்கிய முதல் பட்டியலை ஆம் ஆத்மி கட்சி நேற்று முன் தினம் வெளியிட்டது.

இதையடுத்து சனௌர் தொகுதியின் எம்எல்ஏ ஹர்மீத் சிங் பதன்மஜ்ரா, சமனா தொகுதியின் எம்எல்ஏ சேதன் சிங் ஜௌரமஜ்ரா ஆம் ஆத்மி கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்தனர்.

கட்சி வெளியிட்ட வேட்பாளர் பட்டியலில் இருவரது பெயரும் இடம்பெற வில்லை. மேலும், இவர்களது தொகுதி களுக்கு புதிய பொறுப்பாளர்களை கட்சித் தலைமை நியமித்ததால், தங்களுக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பு கிடைக்காது என்பதை உணர்ந்து இந்த முடிவை எடுத்துள்ளனர்.

இந்நிலையில் கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஏற்கனவே இடைநீக்கம் செய்யப்பட்ட அமிர்தசரஸ் வடக்கு சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் ஐபிஎஸ் அதிகாரியுமான குன்வர் விஜய் பிரதாப் சிங்கும் தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார்.

தனது ராஜினாமாவை சபாநாயகர் குல்தார் சிங் சந்தவானுக்கு அவர் அனுப்பினார். "நான் பஞ்சாப் சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டேன்" என தன் முகநூலில் பதிவிட்டதோடு, தனது ராஜினாமா கடிதத்தையும் அவர் பகிர்ந்துகொண்டுள்ளார்.

ஏற்கனவே ஹர்மீத் சிங் பதன்மஜ்ரா, சேதன் சிங் ஜௌரமஜ்ரா கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதாக நேற்று அறிவித்த நிலையில் பிரதாப் சிங் ராஜினாமா ஆம் ஆத்மி கட்சிக்கு மற்றொரு பின்னடைவாக அமைந்துள்ளது.

மூவரும் இன்று டெல்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் வைத்து பாஜகவில் இணைய உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திரயான்-4, 5 திட்டங்களுக்கான பணிகள் தீவிரம்- இஸ்ரோ தலைவர்!



மீனம்பாக்கம், நவ. 02–

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இஸ்ரோ தலைவர் நாராயணன் நிருபர்களிடம் கூறியதாவது:– நேவிக் வழிகாட்டுதல் செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட் டுள்ளது. இது விமானம், ரெயில், கப்பல் மற்றும் வாகனங்களின் வழிகாட்டுதல், பாதுகாப்பு கண்காணிப்புக்கு பெரிதும் உதவும். ககன்யான் திட்டம் சிறப்பாக நடை பெற்று வருகிறது. விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புவதற்கு முன்பு 3 ஆளில்லா விண்கலங்கள் அனுப்பப்படும்.

சந்திரயான்–4, 5 திட்டங்களுக்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இவற்றை 2028–ம் ஆண்டு விண்ணில் ஏவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆதித்யா விண்கலம் மூலம் அறிவியல் தகவல்கள் தொடர்ந்து கிடைத்து வருகின்றன. குலசேகரப்பட்டினம் ஏவுதள பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

எல்லாத் துறைகளிலும் ரிவர்ஸ் கியர்- த.வெ.க. அரசை சாடிய மு.க.ஸ்டாலின்!



சென்னை, நவ.02–

மு.க.ஸ்டாலின், GST வருவாய் வளர்ச்சியில் தேசிய சராசரிக்கும் கீழே தமிழ்நாடு சென்றது மற்றும் கொரிய முதலீடுகள் ஆந்திராவுக்கு மாறியது குறித்து த.வெ.க. அரசின் அலட்சியத்தை கடுமையாக விமர்சித்துள்ளார். Guidance Tamil Nadu அமைப்பின் செயல்பாடுகள் ego–க்கு காவு கொடுக்கப்பட்ட தாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

முன்னாள் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின், எக்ஸ் தள பக்கத்தில் 'காலையில் கடந்து வந்த இரு செய்திகள்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள பதிவில்,

1) GST வருவாய் வளர்ச்சியில் தேசிய சராசரிக்கும் கீழே த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சி புதைக்கப்பட்டிரு க்கிறது. 2) தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய 1,614 கோடி ரூபாய் கொரிய முதலீடுகள் த.வெ.க. அரசின் அலட்சியத்தால் ஆந்திராவுக்குச் சென்றுவிட்டன. முதலீடுகளை ஈர்த்து தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்த Guidance Tamil Nadu அமைப்பே இந்த ஆட்சியில் தனிநபர்களின் ego–வுக்கு காவு கொடுக்கப்பட்டுவிட்டது.

எல்லாத் துறைகளிலும் இவ்வளவு வேகமாக Reverse Gear–இல் செல்வது எப்படி என இவர்களிடம்தான் கற்றுக்கொள்ள வேண்டும்.

இதுவெல்லாம் என்னவென்றே புரியாத, தெரியாத நம் முதலமைச்சரோ இடைத்தேர்தல் நடக்கும் தொகுதிகளில் கையசைத்து show காட்டக் கிளம்பிவிட்டார். Brace for tough times. Tamil Nadu is doomed under the TVK government என்று கூறியுள்ளார்.

'தமிழ்நாட்டில் மருந்து பற்றாக்குறை இல்லை' - அமைச்சர் அருண்ராஜ்!



சென்னை, நவ. 02–

தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ், திருச்சி அரசு மருத்துவ மனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். இதைத்தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–


"மாநிலம் முழுவதும் காலியாக இருந்த 4 ஆயிரத்து 724 செவிலியர் பணியிடங்கள் அந்தந்த மாவட்ட நலச்சங்கங்கள் மூலமாக வெளிப்படை யான முறையில் நிரப்பப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே செவிலியர் பற்றாக்குறை இனி இருக்காது. மேலும், உயர் சிறப்பு மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்க புதிதாக 284 உயர் சிறப்பு மருத்துவப் பணியிடங்கள் உருவாக்க ப்பட்டு, அவற்றுக்கான நியமன அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் பெரிய அளவில் மருந்து பற்றாக்குறை இல்லை. த.வெ.க. ஆட்சிக்கு மைனஸ் பூஜ்ஜியம் மதிப்பெண் வழங்குவதாக எடப்பாடி பழனிசாமி கூறியிருப்பது, அவர் இயலாமையில் இருக்கிறார் என்பதை காட்டுகிறது. ஏதாவது பேச வேண்டும் என்பதற்காக அவர் இப்படி சொல்கிறார்.

ஊழலற்ற, நேர்மையான, மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு முதல்–அமைச்சர் விஜய் ஆட்சி நடத்தி வருகிறார். ஆங்காங்கே சிறு குறைகள் இருக்கத்தான் செய்கிறது. அவை சரி செய்யப்படும்."

இவ்வாறு அவர் கூறினார்.

இடைத்தேர்தலுக்கு தயாராக இருங்கள்: அதிமுக - மா.செ.,க்களுக்கு பழனிசாமி உத்தரவு!



சென்னை, நவ. 02–

சென்னை – ராயப் பேட்டையில் உள்ள, அ.தி.மு.க., தலைமை அலுவல கத்தில், அக்கட் சியின் மாவட்டச் செயலர்கள் கூட்டம் நடந்தது.

கூட்டம் முடிந்த பின், காலியாக உள்ள, ஐந்து சட்டசபை தொகுதிகள் உள்ள மாவட்ட செயலர்களுடன், பழனி சாமி தனியே ஆலோசனை நடத்தினார்.

கூட்டத்தில், பழனிசாமி பேசியது குறித்து, கட்சி நிர்வாகிகள் கூறியதாவது: தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தலில், ஆளுங்கட்சி வெற்றி பெற்றுள்ளது; இந்த தேர்தல் நமக்கு பாடமாக அமைந்துள்ளது. அடுத்து வரும் ஐந்து தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில், அ.தி.மு.க., வெற்றியை உறுதி செய்யும் வகையில், தேர்தல் பணிகளை தொடங்க வேண்டும்.

மாவட்டச் செயலர்களுக்கு, ஒவ்வொரு தொகுதியிலும், வார்டுகள் பிரித்து தேர்தல் பணி பொறுப்பு ஒப்படைக்கப்படும். தேர்தல் வெற்றிக்கு வேகமாக உழைக்க அனைவரும் தயாராக வேண்டும். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள், தி.மு.க., ஆட்சியில் தான் செயல்படுத்தப்பட்டன. அதை பற்றி நாம் எந்த கருத்தும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், இனிமேல் வாக்காளர்கள் பட்டியல் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். உள்ளூர் மக்களின் பிரச்னை களை மையப்படுத்தி, போராட்டங்களை நடத்த வேண்டும். தலைமையிலிருந்து அறிவிக்கப்பட்ட, கட்சியின் ஆண்டு விழா, பொதுக்கூட்டங்களை நடத்தி முடிக்க வேண்டும். மழை காரணமாக, சில மாவட்டங்களில், கூட்டம் நடத்தப்படவில்லை. நடக்காத ஊர்களில் கூட்டங்களை நடத்தி முடிக்க வேண்டும். புயல், மழை, வெள்ள பாதிப்புகள் ஏற்படும் பட்சத்தில், மக்களுக்கு நிவாரண உதவிகளை செய்வதில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என, பழனிசாமி தெரிவித்தார். இவ்வாறு கூறினார்.

டாஸ்மாக்: புதிய விதிகள் அமல்!



சென்னை, நவ. 02–

தமிழகத்தில் டாஸ்மாக் பார் அனுமதி கடந்த ஜனவரி மாதத்துடன் நிறைவடைந்தது. சட்டமன்ற தேர்தல் காரணமாக ஜூன் மாதம் வரை அனுமதி நீட்டிக்கப்பட்டு இருந்தது. இதையடுத்து தவெக அரசும் அக்டோபர் மாதம் வரை நீட்டித்த நிலையில், அதனை மேலும் இரண்டு மாதங்கள் நீட்டித்து, டிசம்பர் வரை பார்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பார்களுக்கான அனுமதி வழங்கும் விதிகளில் திருத்தம் செய்து தமிழக அரசு அரசிதழ் வெளியிட்டுள்ளது. அதன்படி டெண்டர் மூலம் பார்களுக்கு அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. டாஸ்மாக் கடையை ஒட்டியோ அல்லது டாஸ்மாக் கடையில் இருந்து 100 மீட்டர் தள்ளியோ பார் அமைந்திருக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. வளர்ச்சி, நகர திட்டமிடல் ஆணையங்களில் வணிகம் அல்லது தொழிற்சாலை களுக்கு தூர கட்டுப்பாட்டில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மலைப் பகுதிகளில் ஒருங்கிணைந்து பழங்குடி மேம்பாட்டு திட்டங்களில் இந்த பார்கள் அமைக்க தடை விதிக்கப்பட்டு ள்ளது. அடிப்படை வசதிகள் பாரில் நிச்சயம் இருக்க வேண்டும். ஒவ்வொரு பாரும் 20 மீ தரைதள பரப்பை கொண்டிருக்க வேண்டும். குடிநீர், கைகழுவும் வசதி கட்டாயம் இருக்க வேண்டும். பார் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளை சுகாதாரமாக பராம ரிக்க வேண்டும். பார்களுக்குள் அமர்வதற்கு போதுமான மேஜை, நாற்காலிகள் அமைக்க வேண்டும் மதுபானம் அருந்துவது தெரியாத வகையில் தடுப்புகள் அமைக்க வேண்டும். மது அருந்துவது உடல் நலத்துக்கு கேடு. பாதுகாப்பாக இருப்பீர். மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டாதீர் என்கிற வாசகம் இருக்க வேண்டும் கூறப்பட்டுள்ளது. 21 வயதிற்கு ட்பட்டோ ரை பாருக்குள் அனுமதிக்க கூடாது, அவர்களை பணியிலும் அமர்த்த கூடாது. பார்களை கோட்ட ஆயத்தீ ர்வைக்கு குறைவான பதவிகளில் இருப்போர், மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட வட்டாட்சியர் பதவிக்கு குறைவான பதவிகளில் இருப்போர் ஆய்வு செய்யலாம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவின் பால் விலையை லிட்டருக்கு ரூ.5 உயர்த்த திட்டம்..?



சென்னை, நவ. 02–

ஏழை மக்களை பாதிக்கும் ஆவின் நிறுவன பரிந்துரையை அரசு ஏற்கக் கூடாது என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் பக்க பதிவில் கூறியிருப்பதாவது:

ஆவின் பால் விலையை லிட்டருக்கு ரூ.5 உயர்த்த அனுமதிக்க வேண்டும் என்று தமிழக அரசை ஆவின் நிறுவனம் கேட்டுக் கொண்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. ஆவின் நிறுவனத்தின் இழப்பைக் குறைக்க வேண்டும்; இலாபத்தில் இயக்க வேண்டும் என்பதற்காக, பிற வழிகளை ஆராயாமல் விலையை உயர்த்த வேண்டும் என்ற பரிந்துரை ஏழை மக்களின் நலனுக்கு எதிரானது.

தனியார் நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது ஆவின் பால் விலை மிகவும் குறைவாக இருப்பதால், அது ஏழை& நடுத்தர மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக உள்ளது. ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.5 உயர்த்தப் பட்டால், அது அதிகபட்சமாக 12.50% உயர்வாக இருக்கும். அதை சாதாரண மக்களால் தாங்க முடியாது. அதிலும் குறிப்பாக அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட அனைத்து பொருள்களின் விலைகளும் கடுமையாக உயர்ந்துள்ள நிலையில், ஆவின் பாலின் விலையும் உயர்த்தப்பட்டால், அது மக்களைக் கடுமையாக பாதிக்கும்.


அதே நேரத்தில் ஆவின் தொடர்ந்து இழப்பில் இயங்கினால், அது முடங்கி விடாதா? என்ற வினாவும் எழலாம். மக்களுக்கு மலிவு விலையில் பால் வழங்கினாலும், ஆவின் நிறுவனம் இலாபத்தில் இயங்குவதை இரு வழிகளில் உறுதி செய்ய முடியும். கடந்த ஆண்டில் ஆவின் நிறுவனத்தின் மாநில அலகு ரூ. 120 கோடி இழப்பை சந்தித்துள்ளது. அதே நேரத்தில் மொத்தமுள்ள 27 மாமாவட்ட அலகுகளில் 7 அலகுகள் ரூ.23 கோடி இழப்பை எதிர்கொண்டுள்ள நிலையில், மீதமுள்ள 20 மாவட்ட அலகுகள் 53.20 கோடி இலாபம் ஈட்டியுள்ளன.

அனைத்து பொதுத்துறை நிறுவனங்களைப் போலவே ஆவின் நிர்வாகத்திலும் ஊழல் மற்றும் நிர்வாகத் திறன் இன்மை தலைவிரித்தாடுகிறது. அவற்றை சரி செய்வதன் மூலம் அனைத்து மாவட்ட அலகுகளையும் இலாபத்தில் இயங்கச் செய்ய முடியும்; மாநில அலகின் இழப்பையும் பெருமளவில் குறைக்க முடியும். மலிவு விலையில் பால் வழங்குவதால் மாநில அலகின் இழப்பை முற்றிலுமாக கட்டுப்படுத்த முடியாது. அதேநேரத்தில் பால் விற்பனையில் ஏற்படும் இழப்பை அரசே ஏற்றுக்கொள்வதன் மூலம் ஆவினை இலாபத்தில் இயக்க முடியும்.

தமிழ்நாட்டில் விவசாய மின் இ ணை ப் பு க ளு க் கு முழுமையாகவும், வீடுகளுக்கு 100 யூனிட் முதல் 200 யூனிட் வரையிலும் இலவச மின்சாரம் வ ழ ங் க ப் ப டு வ தா ல் மின்வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய, கடந்த ஆண்டில் மட்டும் தமிழக அரசு ரூ.33,478 கோடி மானியம் வழங்கியுள்ளது. அதேபோல், போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆண்டுக்கு சராசரியாக ரூ.17,000 கோடி மானியம் வழங்கப்படுகிறது. வெற்றிப் பயணத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதால் நடப்பாண்டில் இந்த மானியம் இன்னும் அதிகரிக்கக் கூடும்.

மின்சாரம், போக்குவரத்து ஆகியவை மக்களுக்கு அடிப்படைத் தேவை என்ற அடிப்படையில் தான் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. இவற்றுடன் ஒப்பிடும் போது பால் என்பது இன்னும் பல மடங்கு முக்கியமான அடிப்படைத் தேவை ஆகும். அதைக் கருத்தில் கொண்டு ஆவின் நிறுவனத்திற்கும் தமிழக அரசு மானியம் வழங்க வேண்டும். பால் விலையை உயர்த்த வேண்டும் என்ற ஆவின் நிறுவன பரிந்துரையை ஏற்கக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பூமியை நோக்கி விழும் நாசாவின் பிரமாண்ட தொலைநோக்கி; இந்தியாவுக்கு ஆபத்தா?



அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா கடந்த 2004–ம் ஆண்டு 'ஸ்விப்ட் அப்சர்வேட்டரி' என்ற அதிநவீன விண்வெளி தொலைநோக்கியை விண் ணில் செலுத்தியது. விண்வெ ளியில் ஏற்படும் பிரமாண்ட வெடிப்புகள், காமா கதிர் வெடிப்புகள் மற்றும் சூப்பர்நோ வா எனப்படும் நட்சத்திர வெடிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்காக இது அனுப்பப்பட்டது.

கடந்த 22 ஆண்டுகளாக விண்வெளியில் வலம் வந்த இந்தத் தொலைநோக்கி, சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காமா கதிர் வெடிப்புகளையும், 1,400 வெடிக் கும் நட்சத்திரங்களையும் கண்டறிந்து சாதனை படைத்துள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான சூரிய செயல்பாடுகள் காரணமாக, இந்தத் தொலைநோக்கி திட்டமிட்ட காலத்துக்கு முன்பாகவே பூமியை நோக்கி வேகமாக இறங்கத் தொடங்கியது.

இதைக் காப்பாற்றுவதற்காக 'கேடலிஸ்ட் ஸ்பேஸ்' என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் 'லிங்க்' என்ற 3 கைகளைக் கொண்ட ரோபோவை நாசா கடந்த ஜூலை மாதம் அனுப்பியது. ஆனால், அந்த மீட்பு ரோபோ தொலை நோக்கியின் அருகே செல்ல முடியாமல் செப்டம்பர் மாதமே பூமியில் விழுந்தது.

இதனால் அக்டோபர் மாத இறுதியில் இந்தத் தொலைநோக்கியின் செயல்பாடு கள் முழுமையாக நிறுத்தப்பட்டன. தற்போது கட்டுப்பாட்டை இழந்து தள்ளாடிக் கொண்டிருக்கும் இந்த 1½ டன் எடையுள்ள ஸ்விப்ட் தொலைநோக்கி, வரும் வெள்ளிக்கிழமைக்குள் பூமியின் வளிமண்டலத்திற்குள் நுழைந்து அழியும் என்று அமெரிக்க விண்வெளிப் படை கணித்துள்ளது.

இதன் பெரும்பாலான பகுதிகள் வளிமண்டல உராய்வினால் எரிந்து சாம்பலாகி விடும் என்றாலும், இதில் உள்ள அடர்த்தியான டங்ஸ்டன் உலோகப் பகுதிகள் மற்றும் கண்ணாடியின் உடைந்த பாகங்கள் பூமியில் விழ வாய்ப்புள்ளது. இவை பெரும்பாலும் கடலில் விழக்கூடும் என்றாலும், இது விழக்கூடிய அச்சுறுத் தல் மண்டலத்தில் இந்தியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் மத்திய–தெற்கு அமெரிக்கா ஆகிய பகுதிகள் உள்ளதாக நாசாவின் முதன்மை விஞ்ஞானி பிராட் சென்கோ தெரிவித்துள்ளார். இதனால் இந்தத் தொலைநோக்கியின் பயணப் பாதையை அமெரிக்க விண்வெளிப் படை தீவிரமா கக் கண்காணித்து வருகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020